28 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை

அன்புள்ள பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு,

**பொருள்: 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus)**

குடும்பங்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு முழுமையான, மிகச் சிறந்தவற்றைக் கொடுக்க விரும்புகின்றன. ஆனால் தற்போதைய அன்றாட வாழ்க்கைச் செலவில் - சீருடைகள், முகாம்கள், விளையாட்டுகள், இன்னும் பலவும் - இதனுடன் சேர்க்கின்றன.

அதனால்தான் ஆலன் தொழிலாளர் அரசில் (Allan Labor Government) ஒரேமுறை வழங்கப்படும் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையானது (School Saving Bonus) குடும்பங்களுக்கு வாழ்க்கையை நடத்துவதை சிறிது எளிதாக்குகிறது.

2025 -ஆம் ஆண்டில் ஆரம்ப நிலைக் கல்வி முதல் 12 -ஆம் வகுப்பு வரை படிக்கும் அரசு சாராத பள்ளி மாணவர்கள் மற்றும் தகுதிச் சோதனை செய்யப்பட்டு முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் உல்லாசப் பயணங்கள் நிதி (CSEF) பெறுபவர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகைக்குத் (School Saving Bonus) தகுதியுடையவர்கள் ஆவர்.

தகுதியுடைய மாணவர்களுக்கான பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையானது, (School Saving Bonus) 2024 நவம்பர் பிற்பகுதியிலிருந்து அரசு சாரா பள்ளிகளுக்கு வழங்கப்படும், பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

ஒவ்வொரு குழந்தைக்கும் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) கிடைக்கிறது. அதாவது பள்ளிக்குச் செல்லும் வயதுடைய மூன்று குழந்தைகளைக் கொண்ட தகுதியான குடும்பம் ஒன்று மொத்தம் 1,200 டாலர்கள் பெறும்.

முக்கியமாக, முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் உல்லாசப் பயணங்கள் நிதியுடன் கூடுதலாக பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையும் (School Saving Bonus) கிடைக்கிறது.

பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) பற்றி மேலும் அறிந்துகொள்ள, இந்த அன்றாட வாழ்க்கைச் செலவில் நிவாரணம் என்பது உங்களுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பற்றி உங்கள் பள்ளியில் பேசவும்.

பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) பற்றிய கூடுதல் தகவல்கள் vic.gov.au/school-saving-bonus என்ற இணையதளத்திலும் கிடைக்கும்.

மேலும், எங்கள் குடும்பங்களிலிருந்து உங்கள் குடும்பத்துக்கு - 2025 பள்ளி ஆண்டுக்கான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

உண்மையுள்ள,

**மாண்புமிகு ஜெசிந்தா ஆலன்**
**(Jacinta Allan)**
**விக்டோரியா மாநில முதல்வர்**
**இரு குழந்தைகளின் தாய்**

**மாண்புமிகு பென் கரோல் எம்.பி.**
**(Ben Carroll MP)**
**துணை முதல்வர்**
**கல்வி அமைச்சர்**